ஸ்ரீ

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

SRI VAISHNAVAN

ஸ்ரீ வைஷ்ணவன்.

உண்மையறிவை உணர்த்தும்

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

" எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு."

தொகுதி 6.	1106-ம் ஸு பிரஜோத்பத்தி ஸு ஆனிமீ	பகுதி 8.

நம்மாழ்வார் வணக்கம்

பாருக்குளே மிகப் பாவியே னாயினும்
  பத்தர்போல் வேடமுற்று
பகவதானந்தத்தை யான் பெறக் கருதவே
  பஞ்சேந்திரியங்களெல்லாங்
கிரைக் கீழ்ப்புல்லுருவி போலப்படர்ந்ததைக்
  கிஞ்சித்து மெட்டாமலே
கெடுதலைப் பண்ணிடுங் கொடியமா பாதகக்
  கிளிமொழித் துவரிதள் மேல்
மாரியே சென்றபின் வனிதையர்கள் போகமே
  வற்றாத சுகமென்னவே
வருவையினை வேட்டின்னம வாழ்வமென்றெண்ணுது
  மலரடிக்காட்கொள்ளுவாய்
தேரோடுவீதி யுமாதி ராதன்றனை
  திருவடிகள் தொழுது வாழுந்
திரை பொருவு பொருநையிரு கரைமருவு குருகைவரு
  திருமருவு மகிழ்மாறனே.

ஸ்ரீ

'தன்னுயிர் புகட்டுவிற்ற பெருமகன்'

தோ. மு. பாஸ்கரத் தொண்டைமான். பி. ஏ.

கவியரசர் கம்பர் தம் கவிதையில், புகழ்பெறுதலையே தன் முக்கிய நோக்கமாகக்கொண்டு வாழ்ந்து அநநோக்கம் முட்டின்றி நிறைவேறத் தன்னுயிரையும் கொடுத்த பெருமகன் ஒருவன் உண்டெனில் அவன் சடாயுவே ஆகல் வேண்டும். ———— "தன்னுயிர் புகட்டுவிற்ற சடாயு" என்று கவியரசர் கூறுஞ் செஞ்சொற்களே அவன்றன் பெருமையை இனிது விளக்கும்.

அயோத்தி நகரை அறநெறிவழாது ஆண்ட அண்ணலான தயரதனின் உயிர்த்துணைவனாய் அமைந்த கழுகரசன் பஞ்சவடியைத் தன்னிருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றான். "தாயுரை செய், தந்தை யேவ" கானகச் சென்ற கமலக்கண்ணனான இராமன் பஞ்சவடியில் அஞ்சாத நெஞ்சு படைத்த கழுகின் வேந்தனைக் காண்கின்றான்.

"முந்தொரு கருமலை முகட்டுமின்றிலின
சந்திரனொளியொடு தழுவச் சாத்திய
அந்தயில் கனை கடல் அமரர் நாட்டிய
மந்திரகிரி யென வயங்குவான்றனை"

க்கண்ட வீரர் இருவரும கழுகுருக்கொண்டு கானகத்தில் காந்துறையும் அரக்கனே இவன் என்று முதலில் ஐயுற்றார்கள். எனினும் பின்னர் அவன் இவர்களை யாவர் என வினவி இவர்கள் தயரதன் மக்கள் என்பதறிந்தபின் தன் அன்பன் மக்கள் தன்னை அடைந்ததால் உவகை மிககடைந்து பின்னர் "வேந்தர் வேந்தன் றன் வரைத் தடந்தோளினை வலியவோ" என்று கேட்கவும், அதற்கு மாற்றமாக மன்னன் மைந்தர்கள், "மறக்கமுற்று தன வாய்மை காத்தவன் துறக்கமுற்றான்" என்ச்சொல்லவும், "இறக்கமுற்றான் என ஏக்கம் எய்தினன் உறக்கமுற்றான் என உணர்வு நீங்கினன்" என்று கவியரசர் கழுகரசன் காவலன் பால்கொண்ட காதலை இனிது விளக்குவாராயினர். காவலன் இறந்ததை உணர்ந்த கழுகரசன் ஆற்றும் உரைகள் அளவிறந்தன. மன்னன் மைந்தரைத் தன் மக்களாகவே கருதி,

"மருவினிய குணத்தவளா இரு சிறகால்
— உறத்தழுவி மக்காள்! நீரே
உரிய கடன் வினைமேற்கும் உதவுவீர்
— உடலிரண்டுக்கு உயிரொன்றானுன்
பிரியவுநதான் பிரியாதே இனிதிருக்கும்
— உடற்பொறையாய் பிழை பாராது
எரியதனில் இன்றே புக்கிற வேனேல்
— இத்துயாம் மறவேன் என்று"

எருவை மன்னன் தயரதன் ஆவி நீத்த பின் தான் உயிர் வாழ மனமற்றவனுய் எரியில் விழுந்து இறக்கத்துணிகின்ற ஒரு செயலே உண்மைக் காதலின் உயரிய நிலையை உணர்த்துவதாகும்.

இவ்வாறு உயிர்விட்டுத் துறக்கம்புக எண்ணிய எந்தலை மக்கள் இருவரும் இடை வீழ்ந்து தடை செய்ய, அவர் தம் நலம் கருதி உயிர் தாங்கி வாழ இசைகின்றான். இராம வீரன் கானகமெய்திய காரணம் அறிந்தபோது,

"உந்தை உண்மையனுகி உன் சிற்றவை
தந்த சொல்லைத் தலைக்கொண்டு தாரணி
வந்த தம்பிக்கு உதவிய வள்ளலே
எந்தை வல்லது யாவர் வல்லார்" என்றும்

"வல்லமைந்த அம்மனையும் என்னையும்
எல்லையில் புகழெய்துவித்தாய்" என்றும் கூறும்

செம்மை சான்ற சொற்கள் அவன் அறநெறி தவறா அருந்தகை என்பதை விளக்கும். தாதை யிழந்த மைந்தர்க்கு, தாதையாய் அமைந்து, காட்டில் வைகுதிர் காக்குவன் யானென்று ஆறுதல் மொழிகள் பல கூறிதான் தயரதன்பால் கொண்டுள்ள அறுதகாதலின் அளவை வெளியிடுகின்றான்.

கழுகரசன் காவலில் கானகத்தே வீரர் வாழ்ந்து வருங்கால் அரக்கர் கோன் வஞ்சனையால சீதையைக் கவர்ந்து, இலங்கை நோக்கிப் புறப்பட்டான். தன்னிலை யுணர்ந்த சீதை சோகமுற்றுப் புலம்புகின்றாள். தான் செல்லும் ஆகாயவீதி வழியே உதவி செய்ய வருவார் ஒருவரையும் காணுது,

"மலையே மானே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா உயிரே நிலை தேறினர் போய்
உலையா வலியா யாருழை நீருரையீர்"

என்று மலையையும், மானையும், மயிலையும், குயிலையும், கலையையும் பிணையையும், களிறையும், பிடியையும் கூவி யழைத்து அவைகள் இடத்தெல்லாம் தனது துயரை அறிவிக்கின்றாள். இவள் தன் புலம்பலைக் கேட்ட கழுகரசன் அவ்விடம் விரைந்து வந்து சேர்கின்றான். தன் மருகிக்கு உற்ற துயரை உணர்கின்றான்.

''சஞ்சலங் கலந்தபோது தையலாரை உய்ய வந்து
அஞ்சல் அஞ்சல் என்கிலாத ஆண்மை யென்ன ஆண்மையே"

என்று எண்ணி அருந்துயரில் ஆழ்ந்த மங்கைக்கு அபயமளிக்கின்றான். அபயமளித்த அணங்கைக் காக்க அரக்கர் கோனுடன் போரேற்று நிற்கின்றான். அரக்கர் கோனான இராவணனோ பல படைக்கலங்களுடன் நிற்கின்றான். நம் கழுகரசனோ தன் இறகையும், மூக்கையும், நகத்தையும், பல்லையுமே படையாகக் கொண்டு போர் புரிகின்றார். இவ்விதம் இருந்தும் பறவை வேந்தன் அரக்கர் கோனது வீணைக்கொடியைப்பற்றி யொடித்தான், வில்லைப் பல்லால் பறித்தான், தடக்கை வில்லைத் தோளாவிறுத்தான் பண்மணித்தண்டு பறித்தெறிந்தான். இச்செயல்களைக் கண்ணுற்ற அரக்கர் கோனும் ஆற்றாத சீற்றங்கொண்டு ஓர் கூரிய வேற்படையை சுழற்றி யெறிந்தான் அவ்வேலும் வீரஞ் செறிந்த கழுகரசனின் இறகைத் துளைக்க வலியுற்று,

"பொன் நோக்கியர் தம்புலன நோக்கிய புன்கணோரும்
இன்னோக்கியரில் வழியெய்திய நல் விருந்தும்
தன்னோக்கியர் செஞ்சடை யோகியர் தம்மைச் சார்ந்த
மொன்னோக்கியர் நோக்கமுமாமென மீண்டதவ்வேல்"

என்று அவ்வேல் மீண்ட தன்மையை கம்பர் எடுத்துக்கூறும் நயம் நலஞ்சான்றதாகும். வேசியர் நலத்தை விரும்பும் காசற்றவர் கருத்துப்போலும், இல்லாள் இல்லாத நண்புகலெய்திய நல் விருந்துபோலும், தவஞ்செய்யுந் தன்மை வாய்ந்த மாதவர்பால் சென்ற மங்கையர் நோக்கம் போலும், இராவணன் விடுத்த வேல் கழுகரசன் இறகைத்துளைக்க வலியற்று மீண்டது என்று

அழகொழுக எழுதி யமைக்கின்றார் கவியரசர். இவ்வாறு தன் படை வலியற்றுப்போனதைக் கண்ட வீரன் கடைசியாக ஈசன் அருளிய மந்திர வாளால் எருவை வேந்தனை எறிகின்றான். வலி யுடை வாளுக்கு ஆற்றாது கழுகரசன் மயங்கி வீழ்கின்றான். மன்னவன் வீழ்ந்ததைக் கண்ட மங்கையுப்,

அல்லல் உற்றேனை வந்து அஞ்சல் என்ற இந்
நல்லவன் தோற்பதோ நாதன் வெல்வதோ
வெல்வதும் பாவமோ வேதம் பொய்க்குமோ
இல்லையோ அறமென இரங்கி ஏங்கினள்'

என்று கவியரசர் கவியாற்றுகின்றார். இலங்கை வேந்தனது வலி யறிந்தும் தன்னை அடைக்கலமென்றடைந்த சீதைக்கு அபய மளித்த காரணத்திற்காக அவனுடன் எதிர்த்துப் போர் செய்து வீர சுவர்க்கம் அடைந்த சடாயுவை இராம வீரனும் போற்றி மகிழ்கின்றான்.

"சரண் எனக்கு யார் கொல் என்று ஜானகி யழுது சாம்ப
அரண் உனக்காவன் அஞ்சல் என்று அருளின நம்பி
முரணுடைக் கொடியோனை கொல்ல மொய்யமர் முடித்துத்தெய்வ
மாணம் என் தாதை பெற்றது என்வயின் வழக்கன்றாமோ"

என்று இராமன் தன்னை வந்தடைந்த வீடணனைத் தன் கூட்டத் தோடு சேர்த்துக் கொள்ளுதல் தகாது என்று பலர் சொல்லிய காலத்தும் எடுத்துக் காட்டும் ஒரு சிறந்த சான்றாக இப்பாகம் அமைந்துள்ளது. "தன்னுயிர் புகட்டுவிற்ற பெருமகன் சடாயு" என்று சொல்லின் செல்வனும் அனுமன் கூறுஞ் செஞ்சொற் கள் கழுகரசன் வாழ்க்கையின் வளனை விளக்குவதாகும்.

ஏற்ற போரில் கழுகரசன் வெற்றி பெற்றிலன் எனும் கழு கின் காவலனை வென்ற பெருமை இராவணனுக்கு உரியதன்று என்பதே கம்பர் தங்கருத்தாகும். இமையா முக்கண் ஈசனது வாளின் வலிமையாலன்றி பறவையரசனை இலங்கை வேந்தன் வென்றிருத்தல் இயலாது என்பதை அப்போரைக் கண்ணால் கண்ட மங்கையே உணர்ந்து கூறுகின்றாள். கழுகரசனைத் தான் வென்று விட்டதாகச் செருக்கடைந்திருந்த இராவணனை நோக்கி

"தோற்றனை பறவைக்கு அன்று
தளரும் நீர் வெள்ளம் சென்னி
ஏற்றவன் வாளால் வென்றாய் அன்றெனில்
இறத்தியன்றே"

என்று இகழ்ந்து கூறும் மொழிகளில் கழுகரசனின்வீரம் கனிந்து விளங்கக் காணலாகும். இன்னும் படைக்கலமில்லாப் பறவையை தன் படை வலியால் கொன்ற ஒரு செயலும் அரக்கர்கோனுக்கு அமைந்த புகழாமா? ஒருக்காலுமன்று. படைக்கலமில்லாத அந்நிலையிலும் கழுகரசன் படைக்கலத்துடன் போர் செய்த இலங்கை வேந்தனுக்கு ஒரு சிறிதும் இளைத்தானல்லன் என்பதும் ஈசன் அருளிய வாள் வலிக்காற்றாது உயிர் துறந்தனன் என்பதும் கவிஞர் கருத்தாக இலங்கக் காண்கின்றோம்.

கழுகரசன் தன் மக்கள் பால் கொண்ட காதலை அம்மக்களும் மறந்தவரல்லர். இலங்கை நகரிலே இந்திர சித்தனது படைவலியால் தம்பியும் ஏனைய வானர வீரர் அனைவரும் மயங்கிக் கிடந்ததைக் கண்ட இராமன்

"தாதையை இழந்த பின் சடாயு இற்ற பின்
காதலின் துணைவரும் முடியக்காத்துழல்
கோதர தம்பியும் விளியக் கோளிலன்
சீதையை உகந்துளன் என்பர் சீரியோர்"

என்று கூறும் மொழிகளில் அப்பெருமகன் சடாயுவின் பால் வைத்திருந்த காதல் திறம் விளங்கக் காணலாகும். இன்னும் அம்மேக நாதன் மாயா சீதையை வாளால் எறிந்து கொன்றான் என்பதை அறிந்த காலத்து

"தாதைக்கும் சடாயுவான தந்தைக்கும் தமியனான்
சீதைக்கும் கூற்றங் காட்டி தவிர்ந்திலது ஒருவன் தீமை"

என்று மன்னவன் மைந்தன் மயங்கிக்கூறுகின்றான். தன் தாதைபால் வைத்த காதலையே இராம வீரன் இக்கழுகரசனிடமும் வைத்துள்ளான் என்பதைக் கவியரசர் அழகாக எடுத்தெடுத்துரைக்கின்றார். இராமன் கழுகரசன் பால்கொண்டுள்ள காதலின் தன்மையை இலக்குவனும் அறிந்துள்ளான் என்பதற்கும் ஒரு சான்றுண்டு.

அறநெறி தலைநின்ற ஆரியர் கோனான இராமன் அமர் தொடங்கு முன் அங்கதனைத் தூது போக்க விழைகின்றான். அப்

போழ்தத் தூது அவசியமின்று என்று எடுத்துக்கூறப்போந்த இளைய வீரன் அரக்கர் கோன் செய்துள்ள அழிம்புகழ்களையெல்லாம் எடுத்தெடுத்துரைத்தும் அண்ணல் அரக்கன் பால் வைத்த இரக்கம் மாறாமை கண்டு, கடைசியாக அரக்கர் கோன் சீதையை அவனிடமிருந்து பிரித்ததையும் அவனைக்காக்கப் போந்தபறவை வேந்தனைக் கொன்றதையும் எடுத்துக்கூறி உருக்கமாக இறைஞ்சுகின்றான்.

> "வாழியாய் நின்னையன்று வரம்பறு துயரின் வைகச்
> சூழ்வினா மாயம் செய்து உன் தேவியைப் பிரிவு சூழ்ந்தான்
> ஏழை பால் இரக்கம் நோக்கி ஒரு தனி இகல்மேற் சென்ற
> ஊழிகாண்கிற்கும் வாழ்நாள் உந்தை உயிர் பண்டுண்டான்"

என்று இலக்குவன் இயம்புகின்றான். தன் மக்கள் பால் இறவாத அன்பு பூண்டொழுகிய கழுகரசனைப் போலவே இராம வீரனும் இளைய கோவும் அவன் பால் மாறாத காதலுடையவர்களாய் விளங்குகின்றார்கள். ஆகவே தன்னுயிர் புகட்டுவிற்ற பெருமகனைய் இலங்கிய பெருமை கழுகின் காவலனான சடாயுவிற்கே உரியதாகும் என்று கூறுதல் மிகவும் பொருத்தமுடையதே யாகும்.

ஒரு விக்ஞாபனம்.

(ஆரியூர் வ. பத்மநாப ராமாநுஜதாஸன்.)

திருமகள் மணாளன் கோயில் கொண்டுள்ள திவ்ய தேசங்கள் நூற்றெட்டிலும் தலைமை பூண்டதும், அடைமொழி ஏதுமின்றி 'கோயில்' என்றவளவிலேயே குறிக்கப்படுவதும், ஆழ்வார்கள் பதின்மராலும் பாடப்பெற்றதும் ஆகிய திருவரங்கப் பெரியகோயிலிலே, கலிசாம்ராஜ்யம், ஆடம்பரமாக நடைபெறும் இக்காலத்திலுங்கூட, சந்நிதி கைங்கர்யங்கள் வேறு எந்த திவ்யதேசத்திலும் காணக்கூடாதபடி வியக்கத்தக்கவாறு நடைபெற்றுவருவது வைணவர் பலரும் அறிந்ததே. ஏனைய கோயில்களில்போல், உழைப்புக்குத் தக்க ஊதியமேனும் மான்யங்கள் முதலியனவேனும் போதியவளவு இச்சந்நிதி கைங்கர்ய பரர்கட்கு இல்லாதிருந்தும், பரம்பராக்ரமத்தில் தமக்கு

கிடைத்துள்ள கைங்கர்யங்களில் சற்றும் சலிப்பின்றி நடந்து கொண்டுவருவது பெரிதும் வியத்தற்கு உரியது.

> ''சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
> நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
> புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
> அணையாம் திருமாற்கு அரவு''

என்றபடி திருநாராயணனுக்கு 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை'செய்து ஒப்புயர்வற்ற மாண்புபெற்ற திருவனந்தாழ்வார், 'கலியும் கெடும் கண்டுகொள்மின்' என்று நம்மாழ்வார் அருளியதற்கிணங்க, ஸ்ரீபெரும்பூதூரில் எம்பெருமானாக அவதரித்து 'உபய விபூதி ஸாம்ராஜ்ய பட்டாபிஷேக லக்ஷ்மீசம்பந்நர்' என்று அடியார் துதிக்கநின்று தமது திவ்ய தர்சனத்தை வளர்த்தற்கு உரிய உறைவிடமாக, திருவரங்கம் பெரியகோயிலையே தேர்ந்தெடுத்துக் கொண்டருளியதன் நுட்பம் சிந்தித்து உணரத்தக்கது. பெருமாளும் பிராட்டியுமாக சேர்த்தியில் எழுந்தருளியிருக்கும் சமயத்திலும் சக்கரவர்த்தி திருமகனுக்கு கைங்கர்யம் செய்துநிற்கும் ஒப்புயர்வற்ற தனிப்பெரும் பேற்றைப்பெற்ற இளையபெருமாள் இளையாழ்வாராக கலியுகத்தில் அவதரித்தருளியபோது இராமபிரான் விபவாவதாரங் கொண்டிலாதலின்; 'ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணம் உபாகமத்' என்றபடி பெருமாளும் பிராட்டியும் வழிபட்ட அழகியமணவாளப்பெருமாள் திருவரங்கப் பெருநகரில் எழுந்தருளியிருந்ததால் அத்திவ்ய தேசத்தையே தமது வாசஸ்தானமாகக் கொண்டருளி, 'கோயில் அண்ணர்' என்னும் சிறப்பைப் பெற்றார். அத்தகைய இராமாநுசர் திருஅரங்கச்செல்வனாது திருக்கோயிலில் கைங்கர்யம் செய்யும் பேறு பெற்றோரை, திருக்கலியனுக்கர், திருப்பணிசெய் அன்பர், சீரங்கநான்மறையோர், உள்ளூர்ச் செல்வர், தருக்குமிசைப் பிரான்மார், பாரளந்தார் பாதம் தாங்குவோர், திருக்கரகம் தரித்துநிற்போர், இருக்குமுதல் விண்ணப்பம் செய்வோர், வீரர்க்கு இறையவர்கள், சிபுண்டரீகர் முதலிய பத்துக்கொத்தினராக பகுத்துத் திட்டப்படுத்தியருளியதே இன்றளவும் கட்டுக்குலையாது சந்நிதி கைங்கர்யங்கள் இனிது நடைபெற்றுவருவதன் காரணமாகும். சிற்க.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சந்நிதி கைங்கர்ய பரர்களுக்குள், மித்யா கௌரவங்களில் ஆசைவைத்து உழையும் சிலரும், வழக்கத்தில் இல்லாதிருந்தும நூதனமாக சில உரிமைகளை ஸ்தாபித்துக்கொண்டு விடவேண்டும என விரும்பிநிற்போர் சிலரும், தத்தமது கட்சிகள் வெற்றிபெற வேண்டுமென்று உழைத்துவருகின்றனர். அதன்பொருட்டு அரசாங்க நீதிமன்றத்தாரிடமும் ஸ்ரீரங்கம் தேவஸ்தான அதிகாரிகளிடமும் வழக்குகள் தொடுத்துளார்.

நம்பெருமாளுக்கும் பெரிய பெருமாளுக்கும் அந்தரங்க கைங்கர்யங்களை செய்துவரும் ஒப்புயர்வற்ற பெருமை பெற்றுள்ள அர்ச்சகர்கள், இதுவரையில் வழக்கத்தில் இல்லாத சிறு சிறு கௌரவங்கட்காகவும் வழக்கத்திற்கு விரோதமான உரிமைகட்காகவும் போராடிநிற்பது பெரியதொரு வினோதமேயாம். பகவத அநுக்ரஹ விசேஷத்தால் தங்கட்கு ஏற்கனவே வாய்த்துளள கைங்கர்யங்கட்கும், இப்பொழுது புதிதாக தாஙகள் அடைய ஆர்வம் கொண்டு அலையும் மித்யா கௌரவஙகட்கும் இடையே உள்ள வேற்றுமைகளை சிறிதளவே சிந்தித்துப் பார்ப்பினும், அவர்களது நூதன அபீஷ்டங்கள் அனுவசியமானவையே எனும் உண்மை அர்ச்சகர்களது திருவுள்ளங்கட்கு இனிது புலனாகும். மேலும்,

ஏனைய திவ்யதேசங்களிற் போலன்றி, அரங்கமாநகரில் அமர்ந்துள்ள அழகியமணவாளப்பெருமாள், 'ஸூர்யவம்ச சமுத்பூத' 'அனேக ராஜ சமர்ச்சிதன்' என்றபடி இக்ஷ்வாகு முதல் இராமபிரான் ஈறுக இருநத அரசர்கள் பலராலும் ஆராதிக்கப்பட்டு இறுதியில் இக்கலியிலும் எதித்தலைநாதனுன எம்பெருமானாராலும் போற்றப்பட்டு வேந்தர்க்கெல்லாம தலைசிறந்த வேநதராக 'புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான்' என்று கோதையார் போற்றநின்ற செங்கோலுடைய திருஅரங்கச்செல்வனாக எழுந்தருளியிருக்கும நம்பெருமாளது அடிமைகளாக சந்நிதி கைங்கர்யங்களில் அன்வயித்திருக்கும் கைங்கர்யபரர்கள், தஙகளது தனிப்பெருந்தலைவராய திருஅரங்கேசனை விட்டுவிட்டு வேந்தர்கட்கு பலபடிகள் கீழுள்ள

சாதாரணமான அதிகாரிகளின் தயவை எதிர்பார்த்தவர்களாய் கோர்ட்டுகளை நாடிச்செல்வது பெரிதும் வெட்ககரமான செயலாகும். ஏனைய இலௌகிக ஜனங்களுக்கும் மற்ற திவ்ய தேசங்களில் வாழ்ந்துவரும் கைங்கர்யபரர்கட்கும் வழிகாட்டிகளாக இருக்கவேண்டிய திருஅரங்காசரது திருக்கோயிலிலுள்ள கைங்கர்யபரர்களே வம்பு வழக்குகளை வளர்ப்பதில் தலைப்பட்டிருந்தால், ஏனையவர்களின் கதி என்னே! அன்பு நெறியை வளர்த்துவரவேண்டிய அரங்கன் ஆலயத்து அடியவர்கள், பரம்பரம் வெற்றியில் ஆர்வங்கொண்டு அலையும் வழக்காளிகளாக நடந்துகொள்வதால், 'ராமாநுஜார்ய திவ்யாக்ஞா வர்த்ததாம். அபிவர்த்ததாம்'—என்றபடி எம்பெருமானார் தர்சனத்தை எவ்வளவு தூரம் வளர்ப்பவர்கள் ஆவர்?

திருவரங்க மாளிகையின் கைங்கர்யபரர்கள் வடகலையார் தென்கலையார் எனும் இருகலையினரிலும் கலந்திருந்தும், காஞ்சிபுரம் முதலிய இடங்களில் இருந்துவருவதேபோல் கலைச்சண்டை இதுவரை திருஅரங்கன் திருக்கோயிலில் தலைகாட்டாமலிருந்து வந்தது. வடகலை தென்கலைச் சண்டை ஸ்ரீரங்கத்திலும் உண்டு என்பது, வெளியில் மிகப் பெரும்பாலார்க்கு இன்னமும் தெரியாது. இன்றும், ஸ்ரீரங்கத்திற்கு வரும் ஸேவார்த்திகட்கும் அவ்விரகசியம் தெரிந்துவிடாவண்ணம் இருகலையினரும் மிக்க ஒற்றுமையுடனேயே ஸந்நிதி கைங்கர்யங்களைப் பார்த்துக் கொண்டு வருகின்றனர். அவரவர்கட்கு ஏற்பட்ட உரிமைகள் ப்ராசீனமாக ஏற்பட்டவையாதலின், அவற்றைப்பற்றி தகராறுகள் ஏற்பட்டு வழக்குகள் உண்டாகுமென இதுவரை எவரும் எதிர்பார்க்கவில்லை. இந்நிலைமையில், இருகலையினர்க்கும் பரமாசார்யரான எம்பெருமானாரின் ஸம்ப்ரதாயமான பகவத்ராமாநுஜ ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களான ஸ்வாமிகள் 'பாத்ரச்சண்டை'யையும் 'தீர்த்தச்சண்டை'யையும் ஏனைய மித்யா கௌரவச் சண்டைகளையும் வளர்த்துவருவதில் தலைப்பட்டிருப்பது, ஸ்ரீரங்கராஜ முகோல்லாஸ ஹேதுவன்று என்பதை வினயமாக விண்ணப்பித்துக்கொள்ளுகின்றேன்.

நெற்றியில் திருமண்காப்பு அணியும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஒவ்வொருவரும் எக்கலையினராயினும், எத்திவ்யதேசத்தினராயி

னும், தமது நித்யாநுசந்தான முடிவில் நாடோறும் 'ஸ்ரீமந் ஸ்ரீரங்க ஸ்ரீய மநுபத்ரவா ஸம்வர்த்தய' என்று செய்துவரும மங்களாசாஸனம், 'திருவரங்கச்செல்வம் மேன்மேலும் செழித்து வளர்ந்தோங்குவதாக' என்பதைக் குறிப்பதேயாம். ஆதலின், அத்தகைய ஒப்புயர்வற்ற திருஅரங்கேசர் திருக்கோயிலில் கைங்கர்யம்செய்து வாழும் பாக்கியம் வாய்க்கப்பெற்ற ஸ்வாமிகள் அனைவரும்,

"உற்றேன் உகந்து பணிசெய்து உன்பாதம்
பெற்றேன் ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய்!"

என்று சடகோபர் ப்ரார்த்தித்தவாறே, ஸ்ரீரங்கராஜ அநுக்ரஹத்தையன்றி, வேறு எவ்வித மித்யா கௌரவங்கட்கும் ஸ்தான உரிமைகட்கும் ஆசைப்படாது, எம்பெருமானாது திருவுள்ளத்திற்கு உகப்பாக பயன எதிர்பாராது பணிபுரியும் சிறிய அன்பர்களாக நடந்துகொள்ளத் திருவுள்ளம் கொள்ளுமாறு பெரிதும் வேண்டிக்கொள்ளுகின்றேன். திருஅருள முன்னிறக.

'வீர சுவர்க்கத்தை வேண்டி நின்றார்,
அவர் வேறொன்று கொள்வாரோ?'

கம்பன் கவிச்சுவை.

கம்பர் கட்குடியர்களைப் பரிகசித்து செப்பம செய்திருக்கும் ஓர் கவியைக் கீழே காட்டுவாம.

தன்வரும பாந்தாககிய வெரட்டகம்
தெள்ளுதேன கரும்பியாவையுந் தின்கில
உள்ளமென்னதம் வாயுமுலர்ந்தன
கள்ளுண்மாந்தரிற் கைப்பனதேடியே.

சீதா கல்யாணத்தை முன்னிட்டு தயாதன் பரிவாரங்களுடனும் குடிசனங்களுடனும் மிதிலையை நாடிவரும்போது பலசுமைகளை சுமந்துகொண்டு ஒட்டகங்களும் வந்தன. நடுப்பகலில உண்டி முதலிய காரியங்களை முடித்தற்பொருட்டு தயாதன் ஓர் பொழிலில் தங்கினான். யானை. குதிரை, ஒட்டகை முதலிய ஜெந

துக்களும் அவ்விடத்தில் எதேச்சையாய்த் திரியும்படி விடப்பட்டன. கரும்புத் தோட்டங்களும் தேன்கூடுகளும் அவ்விடத்தில் ஏராளமாயிருந்தது. ஒட்டகைகள் எவ்வளவு பசியாயிருந்தபோதிலும் கரும்பு முதலியவைகளில் கண்வையாமல் வேப்பமரத்தைத் தேடியலைந்தன. இவ்வொட்டகைகளின் நாவிற்கு இக்கொடிய கசப்பே ருசிகரமபோலும். இதுபோல கட்குடியர்கள் எவ்வளவு ருசிகரமான பலகாரங்களை, பக்ஷணங்கள், பழவர்க்கங்களிருந்தாலும அவைகளிற் கண்வையாமல் புளித்து வீசுகின்ற கள்ளிலேயே நாட்டமுடையவர்களாய் அதையேதேடியலைவார்கள் என்பது இக்கவியின் கருத்து. குடியின்கேட்டைப்பற்றிக் கூறும் மற்றுமோர் கவி;

ஏயினவிதுவலால் மற்றேழமைப்பாலதென்னே
தாயிவன்மனைவியெனனும் தெளிவின்றேற் றருமமென்னும்
தீவினையைக்கிலொனறும் அன்றியும்திருக்குநீங்கா
மாயையின் மயக்குநின்றும் மயக்கின்மேல் மயக்கும்வைத்தாம்.

"சொல்வல்லன் சோர்விலஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்குமரிது."

என்ற பொய்யாமொழியாராது திருக்குறளுக்கிணங்க, கவிச்சக்கிரவர்த்தியும் சொல்வன்மையின் திறனைப் பேசத்தொடங்கி ஓர் கவியைச் செப்பஞ்செய்திருக்கிறார். அக்கவி பின்வருமாறு:—

பாகிழைப் பாவையல்குற் பண்டருவிலவித்தண்டேன்
மூகியகூந்தன்மாதர் மொய்த்தபோமலே கேட்டுக்
கூகினவல்லபேச நாணினகுயில்களெல்லாம்
வாசகம்வல்லார் முனனினறியாவர் வாய்திறக்கவல்லார்.

அயோத்திநகர் வாசிகளாகிய அழகிய பெண்மணிகள் ஓர் சோலையிற் கூடிப் பேசிக்கொண்டிருக்கும் ஆரவாரத்தை அங்குள்ள குயில்கள் கண்டு அப்பெண்களது இனிய குரலுக்கு தம் குரல் சமமாகாதென எண்ணி நாணி மௌனமாயிருந்தன வென்பதும், அவர்கட்குமுன் தம் குரலைக்காட்ட வெட்கி அடங்கியிருந்தனவென்பதும் இக்கவியால் போதருகின்றது. அதாவது வாக்குசாதுர்யமுள்ளவர்கட் கெதிரே வாய்திறந்து பேசவல்லவர்கள் ஒருவருமில்லை யென்பது இக்கவியின் கருத்து. ஆதலால் எவ்வளவு படிப்பாளியாயிருந்தாலும் வாக்கு சாதுர்யமில்லையானால் அவனுடைய சொற்பொழிவு மகாநாடுகளில் சிறக்காது என்பதை நேயர்கள் அனுபவத்தில் தெரிந்துகொள்ளலாம.